கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
மூன்றாம் வருடம் முதலாம் அரையாண்டு கலைமாணித் தேர்வு
2017/2018 (ஒக்டோபர் 2020)

# TL 3122 இலக்கிய விமர்சனத்திற்கு ஓர் அறிமுகம்

நேரம்: 02 மணித்தியாலங்கள்

ஒவ்வொரு பகுதியில் இருந்தும் **இரு** வினாக்களைத் தெரிவு செய்து மொத்தம் **நான்கு** வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

1. (அ) இலக்கிய விமர்சனத்தின் அடிப்படைப் பண்புகள் பற்றி எடுத்துரைக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) ஓர் இலக்கிய விமர்சகன் எத்தகைய தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும் என நீர் கருதுகின்றீர்?

(15 புள்ளிகள்)

2. (அ) தமிழில் நவீன இலக்கிய விமர்சனம் தோன்றியமைக்கான பின்னணி யாது?

(05 புள்ளிகள்)

(ஆ) தமிழில் மேற்கொள்ளப்பட்ட இரசனைமுறைத் திறனாய்வு முயற்சிகள் குறித்துக் கருத்துக் கூறுக.

(20 புள்ளிகள்)

3. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்கு** விளக்கக் குறிப்பு எழுதுக.

(அ) இலக்கியக் கோட்பாடும் விமர்சனக் கோட்பாடும்

(ஆ) விமர்சனம், மதிப்புரை, ஆராய்ச்சி என்பவற்றுக்கிடையிலான தொடர்புகள்.

(இ) பகுப்புமுறைத் திறனாய்வு

(ஈ) கலை இலக்கியப் படைப்பில் உருவ, உள்ளடக்க இயைபு

(12 ½ x 02 = 25 புள்ளிகள்)

## பகுதி II

4. தமிழில் நிலவிய மரபுவழி இலக்கிய விமர்சனத்தின் போக்குகள் குறித்து மதிப்பீடு செய்க.

(25 புள்ளிகள்)

5. சமூகவியல் இலக்கிய விமர்சனத்தின் போக்குகள் பற்றி மதிப்பீடு செய்வதோடு அதற்கெதிரான விமர்சனக் குரல்களையும் எடுத்துக் காட்டுக. (25 புள்ளிகள்)

6. நீர் அண்மையில் வாசித்த நாவல் அல்லது சிறுகதை ஒன்று பற்றி விமர்சனம் செய்க.

(25 புள்ளிகள்)